IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 94/2022

Deposition of PW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 19.09.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திலகா | **Caste** | : | |
| **W/o.** | : | லேட். பெருமாள் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 26.08.2022 | முதல் தகவல்அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | – | TN 34 B 2741 வாகனத்தின் ஆர்.சி | நகல் |
| ம.சா.ஆ.3 | – | TN 34 B 2741 வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி | நகல் |
| ம.சா.ஆ.4 | – | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.5 | – | பிரேத பரிசோதனை அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | – | எனது ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது | நகல் |
| ம.சா.ஆ.7 | – | எனது வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது | நகல் |
| ம.சா.ஆ.8 | | TN 93 D 5421 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.9 | – | TN 34 B 2741 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.10 | – | எனது மகனின் இறப்புச் சான்றிதழ் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.11 | – | எனது மகனின் வாரிசு சான்றிதழ் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது | நகல் |
| ம.சா.ஆ.12 | – | குற்றப்பத்திரிக்கை | சான்றிட்ட நகல் |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கூலி வேலை செய்கிறேன். எனது மகன் மேசன் வேலையும் டைல்ஸ் ஒட்டும் வேலையும் செய்து வந்தார். எனது மகன் சத்யா நகரில் குடியிருந்தார். எனது மகன் எங்கு வேலை செய்ய போனார் என்றால் சேலம்கேம்ப்புக்கு வேலைக்கு சென்றார். எனது மகன் யாரிடம் வேலை செய்தார்எ ன்றால் ரவி என்பவரிடம் வேலை செய்தார். நான் சொல்வது போல் என் மகன் மேஸ்திரி வேலை செய்யவில்லை என்றும் சித்தாள் வேலை தான் செய்தார் என்றால் சரியல்ல. எனது மகன் ஓட்டி சென்ற பைக் யாருக்கு சொந்தமானது என்றால் எனது மகனுக்கு சொந்தமானது. எனது மகனுக்கு முறையாக ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் வளைவான பகுதி என்றால் சரிதான். அந்த இடத்தில் லாரி சம்பவயிடத்தில் மெதுவாகவும், ஜாக்ரதையாகவும் நிதானமாகவும் தான் வந்தது என்றாலும் விபத்துக்கு எனது மகனின் அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம் என்றால் சரியல்ல. எனது மகன் மாதம் ரூ.30,000/– சம்பாதித்து வந்தார் என்று வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சித்தாளுக்கு ஒருநாள் கூலி ரூ.100/– என்றாலும் நான் வழக்கிற்காக சேர்த்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்துக்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் அல்ல என்றால் சரியல்ல. எனது மகன் சம்பவசமயத்தில் தலைக்கவசம் அணியாமல் சென்றார் என்றால் சரியல்ல நான் வழக்கிற்காக தலைகவசம் அணிந்து சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகனின் வருமானம் தான் என் குடும்பத்திற்கு பயன்படும் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றாலும் எனது மகன் வீட்டிற்கே பணம் தரமாட்டார் என்றால் சரியல்ல. எனது மகனின் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டுதாரரை வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால்

சரிதான். முதல் தகவல் அறிக்கையின் சங்கதிகள் தவறாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் என் மகன் தான் என்றால் சரியல்ல. நான் கோரிய இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

ஒம்/–திலகா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.

IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 94/2022

Deposition of PW 2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 19.09.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | பசுபதி ராஜா | **Caste** | : | |
| **W/o.** | **:** | லேட் பெருமாள் | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| ம.சா.ஆ.13 | – | எனது ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது | நகல் |
| ம.சா.ஆ.14 | – | எனது வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது | நகல் |
| ம.சா.ஆ.15 | | காயச்சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.16 | 03.09.2022 | டிஸ்சார்ஜ் சம்மரி(26.08.2022 முதல் 03.9.2022 வரை) | அசல் |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மேசன் வேலை செய்கிறேன். இறந்து போன பரத் என்னுடைய நண்பர் என்றால் சரிதான். நானும் விபத்தில் இறந்து போன பரத் என்பவரும் எங்கு வேலை செய்ய போனோம் என்றால் சேலம்கேம்ப்புக்கு வேலைக்கு சென்றோம். நான் யாரிடம் வேலை செய்தேன் என்றால் ரவி என்பவரிடம் வேலை செய்தேன். நான் சொல்வது போல் இறந்துபோன பரத் மேஸ்திரி வேலை செய்யவில்லை

என்றும் சித்தாள் வேலை தான் செய்தார் என்றால் சரியல்ல. பரத் ஓட்டி சென்ற பைக் யாருக்கு சொந்தமானது என்றால் பரத்துக்கு சொந்தமானது. இறந்துபோன பரத்துக்கு முறையாக ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து நடந்த இடம் வளைவான பகுதி என்றால் சரியல்ல . அந்த இடத்தில் லாரி சம்பவயிடத்தில் மெதுவாகவும், ஜாக்ரதையாகவும் நிதானமாகவும் தான் வந்தது என்றாலும் விபத்துக்கு பரத்தின் அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம் என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.25,000/– சம்பாதித்து வந்ததாக வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சித்தாளுக்கு ஒருநாள் கூலி ரூ.100/– என்றாலும் நான் வழக்கிற்காக சேர்த்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்துக்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் அல்ல என்றால் சரியல்ல. பரத் சம்பவசமயத்தில் தலைக்கவசம் அணியாமல் சென்றார் என்றால் சரியல்ல நான் வழக்கிற்காக தலைகவசம் அணிந்து சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பரத்தின் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டுதாரரை வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் சங்கதிகள் தவறாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் பரத் தான் தான் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் தற்போது சரியாகிவிட்டது என்றாலும் தற்போது நல்லநிலையில்தான் உள்ளேன் என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். நான் கோரிய இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

ஒம்/–பசுபதிராஜா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.